1990 ஆகஸ்டு 22]

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் தீர்த்தமலையில் சித்த மருத்துவச் செடிகள் இருப்பதை அறிந்து பாண்டிச்சேரியை சேர்ந்த சித்த மருத்துவர்கள் வந்து கடந்த 10 ஆண்டுகளாகவே சேகரித்து செல்கிறார்கள். இதைப் பயன்படுத்தி அங்கு ஒரு சித்த மருத்துவ மூலிகைப் பண்ணை அமைக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலையில் தற்போது ஆங்காங்கு இருக்கின்ற சுகாதார நிலையங்களின் பக்கத்தில் இருக்கின்ற வளாகங்களில் அவைகள் பயிரிடப்பட்டு அவைகளைச் சேகரித்து மற்ற இடங்களுக்குத் தந்து அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. தேவைப்படுமானால் இந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், இந்த சித்த மூலிகைக்கு நிலஆவரைச் செடி என்று ஒரு செடி தமிழ்நாட்டிலேயே அந்தப் பகுதியிலே தான், அதாவது அந்தத் தீர்த்தமலைப் பகுதியிலேயும், தர்மபுரி மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவற்றையும், மேலும் பல்வேறு சித்த மூலிகைச் செடிகளையும் ஊராட்சி ஒன்றிய அளவிலே உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபுணர்கள் மூலம் கேட்டறிந்து அதற்காகப் பரிசீலனை செய்யலாம்.

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுதல்.

*5607 திரு. ராம. நாராயணன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுவது சம்பந்தமாக சாக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவரிடமிருந்து கடிதம் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 'சாலி அணைக்கட்டு' கட்டுகிற கருத்துருவோ, மதிப்பீடோ அரசின் பரிசீலனையில் இல்லை.

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சார உற்பத்தி.

*7106 டாக்டர் த. சாந்தகுமாரி :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டத்தில் தாராபுரத்தில் நல்ல காற்று விசையுடன் இருக்கும் என்று கருதப்படுகிறது. காற்றின் தன்மையை அறிய ஒரு உபகரணம் தாராபுரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. சுமார் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு இந்த காற்றின் தன்மையை அறிந்து அதன் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் த. சாந்தகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒரு தொழிற்சாலை தமிழகத்தில் உருவாக்கும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்தோடு ஆக்கபூர்வமான முறையில் செயலாற்றி வருகின்ற இந்தத் தருணத்தில், மிகவும் பின்தங்கிய என்னுடைய தாராபுரம் தொகுதியில் தொழிற்சாலைகள் இயங்க மின்சாரம் அடிப்படையான தேவை என்பதால் அதனைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டிலேயே என்னுடைய தொகுதியில் கிடைக்கின்ற "ஃப்ரி ஏர்"-ஐப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து மக்களுக்கு உதவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு முக்கியமாகத் தேவை காற்று. அந்தக் காற்றினுடைய வேகம், Velocity, duration, distribution இவைகளெல்லாம் எந்த அளவுக்கு இருக்கிறதென்று தெரிந்த பிறகு தான் அந்த இடத்திலே காற்றாலைகளை அமைக்க முடியும்.